# தஞ்சாவூர் மாவட்டம்
# அய்யம்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி

**ந.க.எண் : 35/2022 அ1** **நாள் : 26.05.2022**

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

அய்யம்பேட்டை பேரூராட்சியில் **15வது நிதிக்குழு மான்யம் 2020–2021 டைய்டு மான்யம் (Tied) முதல் மற்றும் இரண்டாவது தவணைத் தொகை திட்டத்தின்கீழ்**, அவசர அவசிய நிமித்தமாக மேற்கொள்ள வேண்டிய வேலைகள் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் எதிர் வரும் 2022ம் ஆண்டு ஜுன் மாதம் 10 ம் நாள் **(10.06.2022)- வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணி** வரை கீழே கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி தினத்தில் வரும் ஒப்பந்தபுள்ளியின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் அன்றைய தினமே **10.06.2022 வெள்ளி கிழமை மாலை 3.30 மணிக்கு** வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்களின் முன்னிலையில் பிரித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி டெண்டர் ஷெட்யூல் இணையதளத்தில் **http://tntenders.gov.in,** ஆகிய முகவரிகளில் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **09.06.2022 வியாழ கிழமை மாலை 3.00 மணி** வரையில் அதற்கான கட்டணத்தொகையை செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**15வது நிதி குழு மான்ய திட்டம் 2020–2021 (15th Finance commission (tied )1st and 2nd installment)**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.) | டெபாசிட் தொகை (ரூ.) | டெண்டர் ஷெட்யூல் (ரூ.) | வேலையின் கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1. | பரிசல் துறை ரோடு மற்றும் சாந்திநகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பழுது நீக்கம் செய்தல் | 17,00,000 | 17000 | 6000+1080 | 180 நாட்கள் |
| 2 | பாரதிதாசன் தெரு, சமுதாயா கூடம், ராயல் டவுன், பட்டுசாலிய தெரு, ரவுண்டானா, தெற்கு வீதி, மேட்டு தெரு, அம்பலகார தெரு, நியூடவுன் மற்றும் வெள்ளாஞ்செட்டி தெரு ஆகிய பகுதிகளில் மினிபவர் பம்பு , மோட்டார் , சின்டெக்ஸ் மற்றும் சின்டெக்ஸ் பொருத்த கட்டைகள் அமைத்தல் மற்றும் பழுது சீர்செய்தல் | 10,00,000 | 10000 | 1500+270 | 180 நாட்கள் |
| 3 | பைபாஸ் சாலை மற்றும் சுண்ணாம்பு கார தெரு கழிவறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5,00,000 | 5000 | 1500+270 | 180 நாட்கள் |
| 4 | வளம்மீட்பு பூங்காவில் புதிய இயந்திர அறை அமைத்தல் | 14,00,000 | 14000 | 6000+1080 | 180 நாட்கள் |
| | **கூடுதல்** | **46,00,000** | | | |

**குறிப்பு:–** மேலும் விபரங்கள் வேண்டுவோர் வேலை நாட்களில், வேலை நேரத்தில், அய்யம்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**நிபந்தனைகள்**

1. அய்யம்பேட்டை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அரசு விதிமுறைகளின்படி 2021–22 ம் ஆண்டிற்கு தங்களின் ஒப்பந்தக்காரர் பதிவினை புதுப்பித்துக்கொண்டவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப் படிவங்கள் வழங்கப்படும். மற்றவர்களுக்கு கண்டிப்பாக (ஷெட்டியூல்) வழங்கப்படமட்டாது.

2. டெண்டர் ஷெட்டியூல்கள் அனைத்தும் மூடி முத்திரையிடப்பட்டு, உறையின் மேல் வேலையின் பெயர், அனுப்புநர் மற்றும் பெறுநர் ஆகியோரின் முழு முகவரி தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். டெண்டருடன் அவ்வேலைக்கான முன்வைப்புத் தொகையை அய்யம்பேட்டை பேரூராட்சியில் செலுத்தியதற்கான ரசீதையும் இணைக்கப்பட வேண்டும். டேவணித் தொகை செலுத்தாத டெண்டர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. டெண்டர் படிவங்களில் அடித்தல், திருத்தல் ஏதும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அதற்கு ஒப்பந்தக்காரர்களால் கையொப்பம் இடப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. முன் வைப்புத் தொகை ரொக்கமாக மட்டும் பெற்றுக் கொள்ளப்படும்.
5. தற்பொழுது வேலையின் மதிப்பீட்டிற்கு 1% தொகை வைப்புத் தொகையாக செலுத்தி டெண்டர் கொடுக்கப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்ட பின்பு முன் வைப்பு தொகை 1% செலுத்த வேண்டும். பின்னர் வேலைக்கான பட்டியல் வரப்பெற்றதும் வேலையின் மதிப்பீட்டில் 3% டெண்டர் டேவணித் தொகையாக பிடித்தம் செய்து கொள்ளப்படும்.
6. வரப்பெறும் டெண்டர்களை பரிசீலனைக்காக பிரிக்கும்போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு நிர்வாக அதிகாரியின் தீர்ப்பே முடிவானதாகும். எந்த டெண்டரையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்கவும், ஒப்புக்கொள்ளவும் செயல் அலுவலருக்கும் பேரூராட்சி மன்றத்திற்கும் உரிமை உண்டு.
7. டெண்டர்கள் பிரிக்கப்படும் போது டெண்டர்தாரர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்.
8. அரசு பொறுப்பில் அல்லது பதவியில் உள்ளவர்கள் டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
9. செயல் அலுவலரால் பெற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. மேற்படி விஷயத்தில் பேரூராட்சி மன்றத்தின் தீர்மானமே இறுதியானது. அதைப்பற்றி விசாரிக்க எவ்வித உரிமையும் இல்லை. அப்படி கேட்கப்பட்டாலும் அது செல்லத்தக்கதல்ல.
10. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்தக்காரருடைய டேவணித் தொகை பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு பின்னர் திரும்ப அளிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரருடைய டேவணித் தொகை சம்பந்தப்பட்ட செலவு சீட்டு தணிக்கை முடிந்த பின்னர் திரும்ப அளிக்கப்படும். டேவணித் தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது.
11. ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுத்து ஒப்பந்தக்காரர் வேலை உத்திரவு (WORK ORDER) கிடைத்தவுடன் ரூ.20/–க்குக் குறையாத முத்திரைத் தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
12. பணி மேற்கொள்ளப்படும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும் மற்றும் செயற்பொறியாளரின் சோதனை அளவு பெறப்படவேண்டும்.
13. மேற்கண்ட பணிகள் அனைத்து சட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.
14. பணி மேற்கொள்ளப்படும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் அரசு தொழில்நுட்ப பொறியியல் கல்லூரிகளில் தரம் உறுதி செய்யப்பட வேண்டும் .
15. ஒப்பந்தக்காரர் செலுத்தியிருக்கும் டேவணித் தொகையானது ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டு, அந்நிதியாண்டிற்கு உண்டான தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்று பிடித்தம் ஏதும் இருப்பின் பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை காசோலை மூலம் வழங்கப்படும்.
16. ஒப்பந்தக்காரர் தணிக்கையின் முடிவிற்கு கட்டுப்பட்டவராவார்.

**17.** பணி உத்தரவு (Work Order) வழங்கிய 15 நாட்களுக்குள் பணி குறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் நபார்டு வங்கியின் அங்கீகாரம் பெற்ற மாதிரியில் (4அடி X 21/2 அடி (1.20M X 0.75M) அளவில் வைக்கப்பட்டு, அதனை புகைப்படம் (Digital Photo) எடுக்கப்பட வேண்டும்.

**18.** மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் குறித்து புகைப்படம் (Digital Photo) எடுக்கப்பட வேண்டும்.

**19.** பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடித்த பின்னரும் புகைப்படம் (Digital Photo) எடுக்கப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை (Same Location) காட்டும்படியாக இருத்தல் வேண்டும்.

**20.** பணி மேற்கொள்ளப்படும் பொழுது பொதுமக்களுக்கு எவ்வித இடையூறோ, பாதிப்போ நிகழவண்ணம் பணிகள் பாதுகாப்புடன் மேற்கொள்ளப்படவேண்டும்

**21.** Engineering Manual படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்ததார் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow progress)அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்

**(ஒ—ம் )திருமதி. புனிதவதி குமார்**
**தலைவர்**
**பேரூராட்சி மன்றம்**
**அய்யம்பேட்டை**

**(ஒ—ம்) பா.ராஜசேகர்**
**செயல்அலுவலர்**
**அய்யம்பேட்டை பேரூராட்சி ,**
**தஞ்சாவூர் மாவட்டம்**

**<u>பெறுதல்:—</u>**

அய்யம்பேட்டை பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.

**<u>நகல்:—</u>**

1. அலுவலக விளம்பர பலகைக்கு
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலகம் , மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர். அவர்களுக்கு தகவலுக்காக
4. இளநிலை பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, திருக்காட்டுப்பள்ளி தொகுப்பு அவர்களுக்கு தகவலுக்காக.
5. உள்ளூர் மற்றும் வெளியூர் அலுவலகங்களுக்கு விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.